IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.64/2026

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | MANOGARAN |
| FATHER'S NAME | : | SHANMUGAM |
| VILLAGE | : | KARIGIRI |
| OCCUPATION | : | FARMER |
| AGE | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 18th day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கரிகிரியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரிகளை தெரியும். 19.02.2026 அன்று காலை 10.30 மணியளவில் எதிரிகள் எங்கள் பக்கத்து வீட்டை சார்ந்தவர்கள். சொ்த்து பிரச்சினை சம்மந்தமாக தேவிடியா பையா, பொண்டாட்டியை கூட்டி கொடுத்து வாங்கி தின்ற பாடுஸ் பையா என்று 2ம் எதிரி சிவகாமி திட்டினார். என் மனைவி எதற்காக திட்டுகிறீர்கள என்று கேட்டார். அதற்கு 1ம் எதிரி வினாயகம் தேவிடியா பையா என திட்டி 2ம் எதிரி சிவகாமி மிளகாய் பொடியை என் மேல் அடித்தார். எதிரி வினாயம் மூங்கில் கொம்பால் என் தலை மற்றும் வலது கால் மீது அடித்தார். நான் மயக்கமாகி கீழே விழுந்துவிட்டேன். அதன்பிறகு என் மனைவி என்னிடம் 2ம் மற்றும் 3ம் எதிரி மூங்கில் கொம்பு பிடுங்கி என் மனைவியை அடித்ததாக என்னிடம் சொன்னார். என் மகன் அருண்குமார் சண்டையை விளக்கி விட்டார். என் ்மருமகன் விஷயம் தெரிந்தவுடன் என்னை வேலூர் பழைய அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்றார். மேல் சிகிச்சைக்காக அடுக்கம்பாறை மருத்துவமனை சென்றோம். அடுக்கம்பாறை மருத்துவமனையில் இருக்கும் போலிசார் வந்து என்னிடம் விசாரணை செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எங்களுக்கிடையே சொத்து பிரச்சினை உள்ளது என்றால் சரிதான். இதே போல் என் மீது வழக்கு நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியாது. எதிரி என் மீது புகார் கொடுத்து அந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியும். சம்பவம் எஎன் வீட்டிற்கு எதிரே நடந்தது. சம்பவ தினத்தன்று எதிரிகளுக்கும் காயம் ஏற்பட்டு மருத்துவமனை வந்த விவரம் எனக்கு தெரியாது. முங்கில் கொம்பு மற்றும் மிளகாய் பொடியை போலிசார் கைபபற்றினார்களா என்றால் கைப்பற்றியதாக சொன்னார்கள். முதல் விசாரணையில் சொன்ன சங்கதி தான் போலிசார் விசாரணையில் கூறி உள்ளேன். மருத்துவமனைக்கு என்னை என் மருமகன்்அழைத்து சென்றார்.

மருத்துவமனைக்கு சுயநினைவோடு தான் சென்றேன். மருத்துவரிடம் என்னை யார் எத்தனை நபர்கள் அடித்தார்கள் என்று கூறி உள்ளேன். போலிசார் என்னிடம் 20.02.2026 இரவு 02.00 மணிக்கு வாக்குமூலம் பதிவு செய்தார்கள். எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. அதில் எழுதியுள்ள விவரம் எனக்கு தெரியும். சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் புகார் வாக்குமூலத்தில் உள்ள விவரம் தான் முதல் விசாரணையில் கூறி இருப்பேன் என்றும், இரண்டும் வேறாக உள்ளது என்றால் சரியல்ல. நான்தான் எதிரிகளை தாக்கி காயப்படுத்தினேன் என்றும், என்னை காப்பாற்ற வேண்டி பொய் வழக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.64/2026

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | VIJAYALAKSHMI |
| HUSBAND'S NAME | : | MANOGARAN |
| VILLAGE | : | KARIGIRI |
| OCCUPATION | : | FARMER |
| AGE | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 18th day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கரிகிரியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரிகளை தெரியும். 19.02.2026 அன்று காலை 10.00 மணியளவில் மறுநாள் எங்கள் வீட்டில் பங்ஷன் உள்ளதால் அன்றைய தினம் ஆட்களை வரவழைத்து பலகாரம் செய்திருந்தோம். அப்போது 2ம் எதிரி சிவகாமி அசிங்கமாக திட்டி கொண்டிருந்தார்கள். தேவிடியா, ஊரை ஓத்தவ, பணம் சம்மாதிக்கிற என்று திட்டினார்கள். எதற்காக இப்படி திட்டீகிறீர்கள் என கேட்டேன். அதற்கு 2ம் எதிரி அப்படி தான் திட்டுவேன் தேவிடியா என்று சொன்னார். என் கணவர் எதற்காக திட்டுகிறீர்கள என கேட்டார். அதற்கு உன் மனைவியை ஓக்கவிட்டு பணம் சம்பாதிக்கிறாய் என்று சொன்னார்கள். அப்போது 1ம் எதிரி வினாயகம் மூங்கில் கொம்பை எடுத்து அடிக்க வந்தார். எனது கணவரின் வலது பக்க தலையிலும், வலதுபக்க காலிலும் அடித்து காயப்படுத்தினார். நான் தடுக்க செல்லும் போது 2ம் எதிரி சிவகாமி மிளகாய் தூவி போட்டார்கள். 1ம் எதிரியிடமிருந்த மூங்கில் கொம்பை எடுத்து 2ம் எதிரியும் 3ம் எதிரியும் என்னை இடது கை மற்றும் இடது முதுகிலும் அடித்தார்கள். நான் கீழே உட்கார்ந்து விட்டேன். என் மருமகன் ்அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார். மறுநாள் மருத்துவமனையில் போலிசார் வந்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எங்களுக்கிடையே சொத்து பிரச்சினை உள்ளது என்றால் சரிதான். எதிரி என் மீது புகார் கொடுத்து அந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியும். சம்பவம் என் வீட்டிற்கு எதிரே வெளியே நடந்தது. சம்பவ தினத்தன்று எதிரிகளுக்கும் காயம் ஏற்பட்டு மருத்துவமனை வந்த விவரம் எனக்கு தெரியும். முங்கில் கொம்பு மற்றும் மிளகாய் பொடியை போலிசார் கைபபற்றினார்களா என்றால் கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியும். முதல் விசாரணையில் சொன்ன சங்கதி தான் போலிசார் விசாரணையில் கூறி உள்ளேன். மருத்துவமனைக்கு என்னை என் மருமகன் அழைத்து சென்றார். என் ்மருமகன் சம்பவ இடத்திற்கு 11.00 மணிக்கு

வந்தார். மூங்கில் கொம்பின் அளவை போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். சுயநினைவோடு தான் மருத்துவமனை சென்றேன். மருத்துவரிடம் என்னை யார் எத்தனை நபர்கள் அடித்தார்கள் என்று சொல்லவில்லை. எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் போலிசார் விசாரணையில் சொன்ன விவரம் தான் முதல் விசாரணையில் கூறி இருப்பேன் என்றும், இரண்டும் வேறாக உள்ளது என்றால் சரியல்ல. நாங்கள்தான் எதிரிகளை தாக்கி காயப்படுத்தினோம் என்றும், அதனால் காயம் ஏற்பட்டது என்றும், அதை மறைக்க தான் பொய் வழக்கு கொடுத்தோம் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் சம்பவ இடம் எதிரே உள்ள வீட்டில் நடந்ததாக கூறி உள்ளேன் என்றும், முதல் விசாரணையில் என் வீட்டில் நடந்ததாக கூறி உள்ள நிலையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.64/2026

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | ARUNKUMAR |
| FATHER'S NAME | : | MANOGARAN |
| VILLAGE | : | KARIGIRI |
| OCCUPATION | : | STUDENT |
| AGE | : | 19 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 18th day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கரிகிரியில் வசித்து வருகிறேன். நான் ஏசி மெக்கானிக் 2ம் வருடம் படித்துவருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரிகளை தெரியும். 19.02.2026 அன்று காலை 10.300 மணியளவில் சொத்து பிரச்சினை காரணமாக என் அம்மாவையும் என் அப்பாவையும் என் பெரியப்பாவான ஆஜர் எதிரி மற்றும் அவர் மனைவி திட்டினார்கள். தேவிடியா பையா என் அம்மாவை கூட்டி கொடுத்து வாழுகிறாய், பொறம்போக்கு என்று திட்டினார்கள். அந்த சமயத்தில் நான் காலேஜில் இருந்தேன். சம்பவத்தை ப்ற்றி என் ்மாமா பரந்தாமன் எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். நான் தகவல் அறிந்தவுடன் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தபோது சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். நான் விலக்கிவிட்டேன். அப்போது என் தந்தைக்கு வலதுபக்க தலையிலும், காலிலும் அடிப்பட்டு இருந்தது. என் அமமாவிற்கு இடது பக்க கையிலும், முதுகிலும் அடிப்பட்டு இருந்தது. என் மாமா லோகேஷ் என்பவருக்கு போன் செய்து அவரை வரவழைத்து மருத்துவமனை அனுப்பி வைத்தோம். என்னை போலிசார் விசாரிக்கவில்லை. என் ் அம்மாவையும் அப்பாவையும் மட்டும் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எங்களுக்கிடையே சொத்து பிரச்சினை உள்ளது என்றால் சரிதான். எதிரி எங்கள் மீது புகார் கொடுத்து அந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியும். சம்பவ தினத்தன்று எதிரிகளுக்கும் காயம் ஏற்பட்டு மருத்துவமனை வந்த விவரம் எனக்கு தெரியாது. நான் ்சம்பவ இடத்திற்கு 10.25 மணிக்கு வந்தேன். நான் படிக்கும் கல்லூரியில் இருந்து சம்பவ இடத்துக்கு வருவதற்கு கால் மணி நேரத்திலிருந்து அரை மணி நேரத்தில் வந்து விடலாம். சம்பவ இடத்தில் இருந்து 100 மற்றும் 108 க்கு தகவல் நான் கொடுக்கவில்லை.

மருத்துவமனைக்கு சுயநினைவுடன் ்தான் சென்றார்கள் என்றால் சரிதான். சம்பவம் எங்கள் வீட்டிற்கு எதிரே நடந்தது. நாங்கள்தான் எதிரிகளை தாக்கி காயப்படுத்தினோம் என்றும், அதனால் காயம் ஏற்பட்டது என்றும், அதை மறைக்க தான் பொய் வழக்கு கொடுத்தோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 18.06.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU — Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,

காட்பாடி.